# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2016 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்*

---

*(2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2016*, ஒற்றோபர் மாதம் *21* ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *10.00***  **தபாற் செலவு : ரூபா *10.00***

## *2016 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்*

[*2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச. வ. ஓ. 44/2015*

### *1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். *சுருக்கப்பெயர்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 431 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- *1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சட்டத்தின் 431 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஆறு மாதங்களுக்குள்ளாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டு மாதங்களுக்குள்ளாக" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவாக அல்லது அதற்கு மேற்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒரு இலட்சம் ரூபாவாக அல்லது அதற்கு மேற்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 432 ஆம் பிரிவானது அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்தில் 432 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

"இரண்டு மாதங்களுக்குள்ளாக கோரிக்கையாளர் எவரும் தோன்றாவிடத்து பின்பற்றப்படும் நடவடிக்கைமுறை".

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 432 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 432அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :- *முதன்மைச் சட்டவாக்கத்தில் 432அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

2-PL 010025 -961 (2016/06)

"உரிமைக் கோரிக்கையாளர் இரண்டு மாதங்களினுள் தோன்றுமிடத்தான நடவடிக்கைமுறை.

432அ. (1) அத்தகைய ஆதனத்தின் உடைமைக்கு உரித்துள்ள ஆள் இரண்டு மாதங்களினுள் தமது உரிமைக் கோரிக்கையை நிலைநாட்டுமிடத்து, நீதிவானானவர், தகுதியானவையென நீதிவான் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளின்மீது, ஆதனமானது அவருக்கு ஒப்படைக்கப்பட வேண்டுமென கட்டளையிடுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய ஆதனத்தின் உடைமைக்கு உரித்துள்ள ஆள் அதன் உடைமையை எடுப்பதற்குச் சம்மதிக்காதவிடத்து, அத்தகைய ஆதனம் நீதிவானின் கட்டளையின்கீழ் விற்கப்படலாம்.

(2) அத்தகைய விற்பனையின் விற்றுவரவுகள் வழக்கிலான தீர்ப்புக் கூறப்படும்வரை, அதற்கெனத் திறக்கப்பட்டுத் தொழிற்படுத்தப்படும் வைப்புக் கணக்கொன்றில் அரசாங்கத்துக்குச் சொந்தமான வங்கியொன்றில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆதனத்தின் உடைமைக்கு உரித்துள்ள ஆள், அத்தகைய ஆதனத்தின் பெறுமதியைப் பெறுவதற்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும் முறையிலும் விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன், கொடுப்பனவானது, வழக்கின் பதியப்பட்ட தீர்ப்புக்கமைய செய்யப்படுதலும் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட வைப்புக்கணக்கை நிருவகிக்கும் மற்றும் முகாமைசெய்யும் முறையை விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுதல் வேண்டும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்